FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, யூன்- 2017
Term Examination, June - 2017

தரம் :- 13 (2017)	வணிகக்கல்வி - I	இரண்டு மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :.....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

01) மிகப்பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க
   1) கைத்தொழில் புரட்சி காரணமாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.
   2) பண்டமாற்றில் காணப்பட்ட குறைபாட்டை நீக்க குற்றிநாணயம், நாணயத்தாள் பயன்படுத்தப்பட்டது.
   3) சுயதேவை பூர்த்தி முறையினுள் நேர் உற்பத்தி முறை காணப்பட்டது.
   4) மிகை உற்பத்தி காரணமாக வியாபாரமும் தோன்றியது.
   5) தனியாள் சிறப்புத் தேர்ச்சி மூலம் நேர் உற்பத்தி ஏற்பட்டது. (……….)

02) பின்வருவனவற்றுள் எது பரிமாற்றல் தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாத ஒரு நிபந்தனை அன்று?
   1) இரு தரப்பினர் இருத்தல் வேண்டும்
   2) இரு தரப்பினர் வசமும் பணம் இருத்தல் வேண்டும்.
   3) இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
   4) தரப்பினர் ஒவ்வொருவரும் கொடுப்பதற்கு பெறுமானமுடைய ஏதேனுமொன்றை வைத்திருத்தல் வேண்டும்.
   5) இரு தரப்பினருக்குமிடையில் தொடர் பாடலை மேற்கொண்டு ஒன்றை வழங்குவதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும். (...............)

03) வணிகத்தை வகைப்படுத்தும் நியதி அல்லாதது எது?
   1) உற்பத்தி தன்மை அடிப்படையில்
   2) உற்பத்தித்துறை அடிப்படையில்
   3) அளவின் அடிப்படையில்
   4) வாழ்தன்மை அடிப்படையில்
   5) நோக்கத்தின் அடிப்படையில் (………..)

04) பின்வருவன வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய சில சூழல் சக்திகளாகும்.

A – வாடிக்கையாளர்	B – சமூகக் கலாசார காரணிகள்
C – போட்டியாளர்கள்	D – வழங்குநர்கள்
E – பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர்கள்	F – தொழினுட்பக்காரணிகள்

The National e-Learning Portal for The General Education

மேலுள்ளவற்றுள் அண்மைய சூழல் சக்திகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

1) A,B,C,D   2) A,C,D,E   3) A,C,D,F
4) B,C,D,E   5) B,C,D,F

(………..)

05) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – இலாபம்   E – தொழில் அபிவிருத்தி
B – தொழில் பாதுகாப்பு   F – வேலையில் திருப்தி
C – சந்தைப் பங்கு   G – வணிகத்தின் வளர்ச்சி
D – பதவி உயர்வு   H – சம்பளம்

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது ஊழியர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியை தெரிவு செய்க.

1) B,D,E,H   2) D,E,F,H   3) A,B,C,F
4) B,E,F,H   5) B,D,F,H

(………..)

06) வணிகமொன்றினால் பல்வேறு பிரிவினர் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டும் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – நியாயத்தன்மை   D – தொழிலில் பாதுகாப்பு
B – சமமாக நடத்தும் தன்மை   E – சமூக நலனோம்புச் சேவைகள்
C – வரி செலுத்துதல்   F – சுகாதார பாதுகாப்பு வசதிகள்

மேலுள்ளவற்றுள் வணிகமொன்றினால் ஊழியர்களுக்கு மட்டும் ஆற்ற வேண்டிய சமூகப்பொறுப்புக்களை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A,B,F   2) B,E,F   3) B,D,F
4) A,D,F   5) D,E,F

(………..)

07) பின்வருவனவற்றுள் எது நுகர்வோன் பொறுப்பாக கருதப்படலாம்.

1) தன்னைத்தானே பாதுகாத்தல்
2) தகவல்களை அறிந்திருத்தல்
3) தான் விரும்புவதைத் தெரிவு செய்தல்
4) இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுதல்.
5) நுகர்வோர் உரிமைகளை உறுதிப்படுத்தல்   (………..)

08) பங்குடமை வணிகத்தின் பங்களாரொருவரது ஒரு கடமை

1) வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்
2) பங்குடமை நடவடிக்கைகளில் பங்கு பற்றுதல்
3) வணிகத்தின் கணக்குகளை அறிந்து கொள்ளல்
4) இலாபங்களைப் பகிர்ந்து கொள்ளல்.
5) இட்ட மூலதனத்திற்கு வட்டி பெறுதல்.

(………)

The National e-learning Portal for The General Education

09) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றில் மாத்திரம் காணப்படக்கூடிய பண்பொன்றாக இருப்பது.

1) நீண்ட வாழ்வுத் தன்மை காணப்படலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்
2) பங்குகளை சுதந்திரமாக கைமயற்ற முடிதலும் உச்சப்பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப் படாதிருத்தலும்.
3) பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடியாதிருத்தலும் வரையறுக்கபட்ட பொறுப்பும்
4) வரையறுக்கப்பட்ட பொறுப்பும், பங்குகளையும் தொகுதிக்கடன்களையும் பகிரங்கமாக வெளியீடு செய்யமுடியாமை.
5) உச்ச பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தலும் நீண்ட வாழ்வுத் தன்மை யொன்று காணப்படலும். (………..)

10) இலங்கையில் முதலாவதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கம்.

1) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்
2) பலநோக்குக் கூட்டுறவு சங்கம்
3) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்
4) சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்
5) கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் (………..)

11) பின்வரும் அட்டவணையானது முயற்சியாளர் ஒருவர் வணிகம் ஒன்றைத் தொடங்குவதில் செல்வாக்குச் செலுத்தும் சில காரணிகள் மற்றும் உதாரணங்களை எடுத்துக் காட்டுகின்றது.

காரணிகள்	உதாரணங்கள்
A – தனிப்பட்ட பின்னணிக் காரணிகள்	1. வணிகக்குடும்பத்தி விருந்து பெறப்பட்டவை
B – சமூகக் காரணிகள்	2. சுய நம்பிக்கை
C – முயற்ச்சியாண்மைக் காரணிகள்	3. வேலை வாய்ப்பின்மை

காரணிகள் மற்றும் உதாரணங்கள் தொடர்பில் சரியாகப் பொருத்துகின்ற தொகுதியைத் தெரிவு செய்க.

1) A – 1, B – 2, C - 2
2) A – 2, B – 1, C - 3
3) A – 1, B – 3, C - 2.
4) A – 3, B – 2, C - 1
5) A – 2, B – 3, C - 1 (…………)

12) சிறந்த பணத்தின் ஒரு சிறப்பியல்பு

1) பரிமாற்று ஊடகமாக இருத்தல்
2) பெறுமானத்தினை அறவிடும் கருவியாக இருத்தல்.
3) பெறுமானத்திரட்டாக இருத்தல்
4) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை.
5) பிற்போட்ட கொடுப்பனவுகளின் ஊடகமாக இருத்தல். (………..)

13) பின்வருவனவற்றில் சிறப்புக் கோடிடலாக ஏற்றுக்கொள்ளக்கூடியது.

1) காசோலையின் முகப்பில் இருசமாந்தரக் கோடுகளுடன் "கைமாற்றத்தகாதது" என எழுதுதல்.
2) சமாந்தரமான கோடுகளுக்கிடையில் காசோலையின் முகப்பில் வணிக வங்கியொன்றின் பெயரை எழுதுதல்.
3) சமாந்தரமான கோடுகளுக்கிடையில் காசோயின் முகப்பில் "கைமாற்றத்தகாதது" எனும் பதத்தை எழுதுதல்
4) சமாந்தரக் கோடுகளினுள் "பெறுவோன் கணக்கு மட்டும்" என எழுதுதல்
5) காசோலையின் முகப்பில் சமாந்தரமான இருகோடுகளை மாத்திரம் வரைதல் (………..)

14) A - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
B - குத்தகைக் கம்பனிகள்
C - காப்புறுதிக் கம்பனிகள்
D - முதன் நிலை வணிகர்கள்
E - நிதிக் கம்பனிகள்
F - கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்
மேலே குறிப்பிட்டவற்றுள் உள்ள விசேட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
1) A,B,C 2) B,C,D 3) D,E,F 4) C,D,F 5) B,D,F. (............)

15) பின்வருவனவற்றுள் எது இலங்கைக் காப்புறுதிச் சபையின் ஒரு தொழிற்பாடு **அன்று?**
1) காப்புறுதி கம்பனிகளைப் பதிவு செய்தல்
2) காப்புறுதி முகவர்களைப் பதிவுசெய்தல்.
3) காப்புறுதி தரகு நிறுவனங்களை பதிவு செய்தல்.
4) காப்புறுதி கம்பனிகளது பதிவை இரத்துச் செய்தல்.
5) காப்புறுதி வணிகத்தின் மேம்பாட்டிற்காக செஸ் (CESS) வரியை விதித்தல்.
(………)

16) A - செய்தியை வழங்கியவுடனே பிரதிபலிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை.
B - செய்தி பெறுபவரின் தன்மையைப் பொறுத்து செய்தியை அனுப்பும் இயலுமை.
C - இது மிகவும் இறுக்கமான ஒருமுறையாகும்.
D - செய்தியை மிகவும் சரியா அனுப்பும் இயலுமை.
E– செய்தியானது அனுப்பப்பட்டு விட்டது என்பதை உறுதிப்படுத்தும் இயலுமை
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் வாய்மூலமான தொடர்புகொள்ளலின் நன்மைகளை வெளிப்படுத்தும் தொகுதியை தெரிவு செய்க.

1) A,B,E 2) B,C,D 3) A,B,D 4) B,D,E 5) C,D,E (………..)

17) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த ஒரு காரணி அல்லாதது எது?
1) நேரில் உற்பத்தி 2) உற்பத்தியில் மிகை 3) உற்பத்தியில் கிரயம்
4) பூகோளமயமாதல் 5) வர்த்தக ஒப்பந்தங்கள்
(………..)

18) முகாமையார்களது உப வகிபாகங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A – கண்காணிப்பாளர் F – மேலதிகாரி
B – முயற்சியாளர் G – வளங்களை ஒதுக்கீடு செய்பவர்
C – தகவல்களை வழங்குபவர் H – பிரச்சினைகளைக் கையாள்பவர்
D – தலைவர் I – தொடர்புகளைப் பேணுபவர்
E – உத்தியோகபூர்வ பேச்சாளர் J – நடுநிலையாளர்.

மேலே தரப்பட்டவற்றுள் முகாமையாளர்களுடைய தீர்மானம் எடுத்தல் உபவகிபாகத்தை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?

1) A,B,D,G 2) B,G,H,J 3) B,C,F,G 4) B,D,G,J 5) C,E,F,G
(………)

19) ஓர் ஒழுங்கான கட்டுப்பாட்டுச் செயல்முறையின் முதற்படி
1) செயற்பாட்டு விளைவுகளை அளவீடு செய்தல்.
2) செறயற்பாட்டு பெறுபேற்றினை நியமங்களுடன் ஒப்பிடுதல்.
3) மதிப்பீடு செய்தலும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்
4) செயல் நிறைவேற்ற நியமங்களை உருவாக்கல்.
5) பின்தொடர்தலும் பின்னூட்டலும் (……….)

20) ஊக்குவித்தல் எனப்படுவது.

1) சுய விருப்பத்துடன் பணியை நிறைவேற்றுவதற்கு ஊழியர்களுக்கு உற்சாகத்தை உண்டு பண்ணுதல்.
2) ஊழியர்களுக்கு கூடுதலான சம்பளங்களையும் பிற நன்மைகளையும் பெற்றுக் கொடுத்தல்.
3) ஒரு பணியை நிறைவேற்றுவதற்கு ஊழியர்களைக் கட்டாயப்படுத்தல்.
4) ஒரு பணியை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டும் ஆற்றல்.
5) ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல். (………..)

21) கணணி உதவியுடனான வடிவமைப்பினால் (CAD) ஏற்படும் ஒரு நன்மை அல்லாதது எது?

1) வீண் விரயங்கள் குறைதல்
2) பூச்சிய வழுவுடைய உற்பத்தப் பொருட்கள் உருவாக்கப்படல்.
3) உற்பத்தி விரைவு படுத்தப்படல்
4) தொழில் வழங்குனர் தொழிலாளர் தொடர்பு விருத்தியடைதல்.
5) வினை திறன் அதிகரித்தல் (……….)

22) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கு பொருத்தமற்ற தொழிற்பாட்டைத் தெரிவு செய்க.

1) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
2) இருப்புக் கட்டுப்பாடு
3) விநியோகம்
4) கிரயக் கட்டுப்பாடு
5) தேவையான பொறித்தொகுதிகளை நிர்ணயித்தல் (………..)

23) உற்பத்திப் பொருளொன்றின் விலையை நிர்ணயிக்கும் பொழுது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகளின் தொகுதி எது?

1) கிரயம் / இலாபம் / வழங்குதல்
2) கேள்வி / கிரயம் / போட்டியாளர்கள் விலை
3) பெறுமதி / திருப்தி / கிரயம்
4) திருப்தி / கேள்வி / பரிவர்த்தனை
5) போட்டியாளர்விலை / வழங்கல் / பெறுமதி (………)

24) பின்வரும் தொகுதிகளுள் நிதியிடல் தீர்மானங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

1) சரக்கிருப்புக்கள், கடன்பட்டோர், காசு மற்றும் அட்டுறுச் செலவுகள் மீதான தீர்மானங்கள்.
2) பங்கு மூலதனம், கடன்மூலதனம், பங்கிலாபங்கள் மற்றும் வணிக விரிவாக்கம் என்பவற்றின் மீதான தீர்மானங்கள்
3) நிலையான சொத்துக்கள், காசு, சரக்கிருப்புக்கள் மற்றும் கடன்பட்டோர் மீதான தீர்மானங்கள்.
4) கடன்கொடுத்தோர், பங்குமூலதனம், பங்கிலாபங்கள் மற்றும் அட்டுறு செலவுகள் மீதான தீர்மானங்கள்
5) கடன்கொடுத்தோர், பங்குமூலதனம், காசு மற்றும் அட்டுறு செலவுகள் மீதான தீர்மானங்கள்...

(………..)

25) மனித வளமுகாமையின் ஒரு பொது நோக்கு

1) ஊிழயர் தொடர்பான சட்டங்களையும் பிரமாணங்களையும் நிறைவேற்றுவதை உறுதி செய்தல்.
2) சரியான நேரத்தில் குறிப்பிட்ட வேலையை மேற்கொள்வதற்கு சரியான ஊழியரைச் சேர்த்துக் கொள்ளல்.
3) பொருத்தமான ஊழியர் படையை உருவாக்கலும் தொடர்ந்து வைத்திருப்பதும்
4) ஊழியர் கிரயத்தினைக் கட்டுப்படுத்தல்.
5) வேலைச் சூழலின் தரத்தை (Quality work Life) அதிகரிக்கச் செய்தல் (…...........)

26) செயற்றிறன் மதிப்பீட்டில் ஊழியருக்கு ஏற்படும் ஒரு பிரதிகூலம்

1) பதவியுயர்வு இடமாற்றம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ள
2) பயிற்சிக்கான தேவையை அடையாளம் காண
3) உயர் செலவுகள் ஏற்படும்
4) மதிப்பீட்டு முறைமை காரணமாக திறன்கள் வெளிக்காட்டப்படாமை.
5) செயற்பாட்டு மட்டம் குறைவான ஊழியர்கள் அதிருப்தியடைவதன் காரணமாக உற்பத்தித்திறன் வீழ்ச்சியடையும் (………)

27) ஒரு பொருளின் உற்பத்திக்கு மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் கருத்திற் கொள்ளப்படாத ஒரு காரணி

1) வழங்குனரின் நிதி நிலைப்பாடு
2) மூலப்பொருளின் தரம்
3) மூலப்பொருளின் விலை
4) ஒப்பந்தக் காலம்
5) கொடுப்பனவு நிபந்தனைகள் (………)

28) தரவுகளைஒழுங்கமைத்தல் (data Processing) செயற்பாட்டின் ஒரு கருமம் அல்லாதது எது?

1) வகைப்படுதத்ல்
2) தெரிவு செ்தல்
3) தகவல்களைப் பயன்படுத்தல்
4) கணித்தல்
5) தொகுத்தல் / பொழிப்பாக்கல் (………..)

29) பின்வருவனவற்றுள் சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படாத ஒரு உருப்படி

1) தொழிற்சாலைச் சந்தை என்பவற்றின் பகுப்பாய்வு
2) மூலப்பொருட்களின் தேவைப்பாடுகள்
3) போட்டி நிலமைகளின் பகுப்பாய்வு
4) சந்தைப்படுத்தல் செலவு
5) போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாயமுறைகள் (………..)

30) வெளியகப் பிரிவினரை இலக்காகக் கொண்ட வணிகத் திட்டமொன்றின் மிகவும் முக்கியமான பகுதி

1) வணிக விபரணம்
2) நிதித்திட்டம்
3) மனித வளத்திட்டம்
4) நிறைவேற்றுச் சுருக்கம்
5) இவற்றுள் எதுவுமில்லை (………..)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31) வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளினூடாக ………………………………………. உம் ……………………………….. உம் இனம் காணப்படுவதுடன் புறச்சூழல் காரணிகளினூடாக ………………………………………………………………………………….…. உம் ……………………………………………………………………… உம் இனம்காணப்படும்.

32) அ) …………………………… மற்றும் ………………………..என்பவற்றின் சேர்க்கை வர்த்தகம் எனப்படும்

ஆ) நுகர்வோர் விசேட கவனம் செலுத்தி கொள்வனவு செய்யும் பொருட்கள் ……………………………. என அழைக்கப்படுவதுடன், உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் ………………………………………………… பொருட்கள் என அழைக்கப்படும்.

33) அ) வணிகத்திட்டத்தைச் சரியான முறையில் செயற்படுத்துதல் சரியான தீர்மானமெடுத்தல் என்பவற்றிற்காக வணிகம் அக்கறை செலுத்தும் தரப்பினர் ஒரு ……………………………………………………….. எனப்படுவார் விற்பனை உபாயங்களை தீர்மானம் செய்தல். தகவல்களை அறிந்து கொள்தல் என்பவற்றிற்காக வணிகம் தொடர்பாக அக்கறையுடையவர் ஒரு ……………………………………………………… எனப்படுவார்.

ஆ) வணிகமொன்றின் மையவிழுமியங்களின் முறைமை (corevalues)ஒரு …………………………………………. சூழல் காரணியாகக் காணப்படும் அதேவேளை வாடிக்கையாளர் ஒரு ………………..……………. சூழல் காரணியாகக் காணப்படுகின்றது.

34) அ) இலங்கைக்கு வெளியே வணிகநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கையில் கூட்டினைக்கபட்ட கம்பனி …………………………………………………………….. என அழைக்கப்படுவதுடன் பொதுமக்களுக்குப் பங்குகளை பகிரங்கமாக வெளியீடு செய்ய தடை செய்யப்பட்டுன. ஒரு கம்பனி …………………………………..………. என அழைக்கப்படும்.

ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உரிமையினைத் தெரிவிப்பதற்கு இறக்குமதியாளனால் சுங்கத் திணைக்கள்திற்கு சமர்ப்பிக்கப்படுவது ……………..………… …….…………………………….... என அழைக்கப்படுவதுடன் ஏற்றுமதி செய்யப்படும். பண்டங்களின் விபரம் விலை, கொடுப்பனவு நிபந்தனை என்பவற்றை உள்ளடக்கிய ஆவணமானது ………………………………………….………... என அழைக்கப்படும்.

35) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி, பிழையைக் குறிப்பிடுக.

கூற்று	சரி/பிழை
1) இடர்கள் ஏதனையும் ஏற்றுக்கொள்ளுதல் முயற்சியாண்மையின் ஒரு குணவியல்பு ஆகும்..	(……...)
2) ஒரு பங்குடமையானது உடன்படிக்கையொன்று இன்றிய இருக்க முடியாது	(……...)
3) வியாபார அங்கீகாரம் பெற்ற வணிகம் (*franchisee*) ஒன்றிற்குத் தேவைப்படும் மூலதனமாகது அங்கீகாரமளிக்கும் கம்பனியினால (Franchiser) வழங்கப்படும்.	(……...)
4) பாய்ச்சல் உற்பத்தியில் உற்பத்திப் பொருள் வரிசை பலவகையாகும்.	(……...)

36) அ) ஹென்றி மின்ஸ்பர்க் இனால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமையாளர்களது பிரதான வகிபாகங்கள் ………………………………………………………………………………… உம் ……………………………………………………………………………. உம் ஆகும்.

ஆ) குழு உறுப்பினர்களது தொழிலுடன் தொடர்புடைய கருமங்களுக்கு வழிகாட்டி செல்வாக்கு செலுத்தும் செயல் முறை ……………………..……………………… என அழைக்கப்படும்.

37) அ) வணிகக் கொடுக்கல் வாங்கல்களில் இலத்திரனியல் வர்த்தகம் இடம்பெறக்கூடிய இருமுறைகளாக ……………………………………..., …………………………………….. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) இலங்கையிலுள்ள வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் இரண்டாக ………………………………… ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

38) அ) வாடிக்கையாளரொருவரின் குறித்த தேவைக்கு அமைவாக உற்பத்தி செய்தல் ………………………………………………..……. என அழைக்கப்படுவதுடன், உற்பத்தி செய்யப்படுகின்ற சகல பொருட்களும் பிழையின்றி உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் …………………………………………………… நுட்பமுறைகள் எனப்படும்.

ஆ) கம்பனி ஒன்று தனது உற்பத்தியினை தனிச் சின்னத்தின் கீழ் சந்தைக்கு முன் வைக்குமாயின் அது ………………………………………………….……….. சின்னம் எனப்படுவதுடன், உற்பத்திப் பொருள் வியாபாரிக்கு விற்கப்பட்ட பின் அவ்வியாபாரி உருவாக்கும் குறியீடு ……………………………..…………………. சின்னமாகும்.

39) அ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் ஒழுங்கமைக்கவும் உருவாக்கப்பட்ட நிறுவம் ………………………………………….. என அழைக்கப்படுவதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பங்குக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைக்கும் மையமாக பணியாற்றும் நிறுவகம் ……………………………………..……. ஆகும்.

ஆ) குறித்த பதவிக்குரிய தொழிற்பாடுகள் ……………………………..………….. இல் காட்டப்படுவதுடன் அப்பதவியில் அமர்த்தப்பட வேண்டியவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் ………………………………………….. இல் காட்டப்படும்.

40) அ) …………………………………… மற்றும் ………………………………. என்பன முகாமைத்துவம் செயற்பாட்டின் அடிப்படையில் மனித வள தகவல் முறைமையின் உபமுறைகளாகும்.

ஆ) வணிகத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு முன்முயற்சியாளரினுள் உருவாகின்ற மனநிலை …………………………………………….. ஆகும்.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) தேவைகளது குணாம்சங்கள் நான்கு எழுதுக.

1) .... 2) ....

3) .... 4) ....

42) வணிகத்தின் துணைச் சேவைகள் நான்கு குறிப்பிடுக.

1) ....

2) ....

3) ....

4) ....

43) இலங்கையில் செயற்படும் பல்வேறு நிதிநிறுவன வகைகள் நான்கினை எழுதுக.

1) ....

2) ....

3) ....

4) ....

44) வினைத்திறனான தொடர்பாடல் முறையொன்றில் இருக்க வேண்டியபண்புகள் நான்கினை எழுதுக.

1) ....

2) ....

3) ....

4) ....

45) சிறிய வணிகங்களுக்கு தொழில் நுட்ப தேவைகளை வழங்கும் இரண்டு நிறுவகங்களைப் பெயரிடுக.

1) ....

2) ....

46) நிறுவனமொன்றின் இருப்புக் கட்டுப்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

1) ....

2) ....

3) ....

4) ....

47) உற்பத்தித் திறன் அதிகரித்துக் கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்ப முறைகள் நான்கினை எழுதுக.

1) ....

2) ....

3) ....

4) ....

The National e-learning Portal for The General Education

48) அ) பங்கு முதலீட்டின் மூலம்கிடைக்கும் பிரதான நலன்கள் இரண்டு தருக.

1) ………………………………………… 2) ……………………………………………

ஆ) தற்போது கொழும்பு பங்குச் சந்தையில் பயன்படுத்தப்படும் இரண்டு விலைச் சுட்டெண்களை எழுதுக.

1) ……………………………………... 2) ………………………………………………

49) இலங்கையில் தொழிற்சங்க நடைமுறைகளுக்கு நான்கு உதாரணங்கள் எழுதுக.

1) …………………………………………………………………………………………..

2) …………………………………………………………………………………………

3) ………………………………………………………………………………………….

4) ………………………………………………………………………………………….

50) அ) தொழில் இசைவாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் வேறுபட்ட முறைகள் இரண்டு தருக.

1) …………………………………………. 2) …………………………………………

ஆ) தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்த ஏனைய தொழில்நுட்பங்கள் இரண்டு தருக.

1) …………………………………………. 2) …………………………………………

The National e-learning Portal for The General Education

FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூன் - 2017

Term Examination, June - 2017

தரம் :- 13 (2017)	வணிகக் கல்வி – II	மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்து இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(1) i) அ) "வணிகம் (Business) என்பது வியாபாரத்திலும் (TRADE) விரிந்தது ஆகும். விளக்குக.
ஆ) தனித்தனியாக நுகர்வோர் பொருள்கள் (Consumer goods) கைத்தொழில் பொருள்கள் (Industrual goods) என்பவற்றை வகைப்படுத்துக. (4புள்ளிகள்)

ii) அ) வணிகத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களைக் (Stakeholdes) குறிப்பிட்டு அத்தரப்பினர்கள் அக்கறை கொள்வதற்கான காரணங்களைத் தனித்தனியே கூறுக.
ஆ) வணிகங்களுக்கு பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கலாம் அவற்றில் நான்கு நோக்கங்களைப் பெயரிடுக. (4புள்ளிகள்)

iii) அ) அரசானது வணிகங்களின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய நான்கு வழி முறைகளைக் குறிப்பிடுக.
ஆ) தேசிய அல்லது சர்வதேச நியமங்களுக்கமையப் பண்டங்களை உற்பத்தி செய்வதன் மூலம் கைத்தொழிலாளர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் யாவை? (4புள்ளிகள்)

iv) அ) வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்கும் வீழ்ச்சிக்கும் வெளிவாரியான தாக்கங்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.
ஆ) இலங்கை அரசாங்கமானது நுகர்வோர் பாதுகாப்பிற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விபரிக்குக. (4புள்ளிகள்)

v) அ) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இரு வகைப்பண்டங்களையும் இரு வகைச் சேவைகளையும் தனித்தனியே குறிப்பிடுக.
ஆ) வணிக விழுமியங்களைப் பின்பற்றுவது நிறுவனமொன்றிற்கு ஏன் முக்கியமானதென விளக்குக. (4புள்ளிகள்) **(20புள்ளிகள்)**

(2) i) அ) நேர்வரிக்கும், நேரில் வரிக்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக.
ஆ) பொருளாதாரத்தில் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

ii) அ) தனியுடைமை வணிகமொன்றை பதிவு செய்வதாயின் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.
ஆ) தனியுடைமை வணிகம் உரிமையாளரின் முழுமையான பெயரைக் கொண்டு காணப்பட்டால் பதிவு செய்ய வேண்டியதில்லை ஆனாலும் வணிகர்கள் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர் அதற்கான காரணங்கள் நான்கு எழுதுக. (4புள்ளிகள்)

iii) அ) வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றுடன் ஒப்பிடும் போது பங்குடைமையில் காணக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
ஆ) பங்குடைமை ஒப்பந்த மொன்றில் பொதுவாக உள்ளடக்கப்படுகின்ற விடயங்களை சுருக்கமாக விபரிக்குக. (4புள்ளிகள்)

iv) வணிக அமைப்புக்கள் எனும் வகையில் வரையறுத்த கம்பனிகளின் நான்கு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

v) அ) முயற்சியாளர் ஒருவர் உருவாகுவதற்கு ஏதுவாகக் கூடிய நான்கு காரணிகளை விபரிக்குக.
ஆ) முயற்சியாண்மை அபிவிருத்திக் கூடாக பெறக் கூடிய சமூக பொருளாதார நன்மைகள் யாவை? (4புள்ளிகள்) **(20புள்ளிகள்)**

(3) i) "பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய வணிகங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்"
அ) சிறிய வணிகங்களில் காணக்கூடிய விசேட பண்புகள் நான்கு எழுதுக.
ஆ) ஒரு நாட்டிலே சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்கு அவசியமான காரணிகளை விளக்குக.(4புள்ளிகள்)

ii) அ) காசோலையில் புறக்குறிப்பிடல் என்பதனால் கருதப்படுவது யாது? புறக்குறிப்பிடல் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக.
ஆ) வியாபார வங்கிகளினால் வணிகர்களுக்கு வழங்கப்படுகின்ற நான்கு சேவைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (4புள்ளிகள்)

iii) இன்று கொடுக்கல் வாங்களுக்காக இலத்திரனியல் பணம் பயன்படுத்துவது அதிகரித்து காணப்படுகின்றது.
அ) இலத்திரனியல் பணம் பயன்படுத்துவதிலுள்ள அனுகூலங்களையும் வரையறைகளையும் விளக்குக.
ஆ) இலங்கையில் பயன்படுத்தப்படும் கடன் அட்டைகளுக்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.(4புள்ளிகள்)

iv) அ) வணிக அபிவிருத்திக்கு நிதி நிறுவனங்கள் எவ்வகையில் பங்களிப்பை வழங்குகின்றன என்பதகை சுருக்கமாக விளக்குக.
ஆ) வணிகங்களின் தொடர்ச்சியான செயற்பாட்டில் காப்புறுதி எவ்வாறு துணையாக அமையும் என்பதை விபரிக்குக. (4புள்ளிகள்)

v) நட்ட அச்சத்தை காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சம் எனவும், காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சம் எனவும் இருவகைப்படுத்த முடியும்.
அ) காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சங்களுக்குக் காணப்பட வேண்டிய பண்புகள் எவை?
ஆ) ஒரு நபர் காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சங்களை உதாரணங்களுடன் விபரிக்குக. (4புள்ளிகள்) **(20புள்ளிகள்)**

(4) i) அ) ஆயுள் காப்புறுதிக்கும் ஆதனக்காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கைக் குறிப்பிடுக.
ஆ) புகையிரதப் போக்குவரத்தின் நான்கு பிரதான குறைபாடுகளை விளக்குக.(4புள்ளிகள்)

ii) அ) சமிக்ஞையும் குறியீடும் மூலமான தொடர்பாடலின் இரண்டு நன்மைகளை எழுதுக.
ஆ) வணிக நிறுவனத்தின் முறையான உள்ளக தொடர்பாடலின் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

iii) அ) சுதந்திர வர்த்தகத்தை தடுப்பதற்கு நாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு கட்டுப்பாடுகளை எழுதுக.
ஆ) உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கு இடை நடுவர்களைப் பயன்படுத்துவதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு பிரதான நன்மைகளை விபரிக்குக. (4புள்ளிகள்)

iv) முகவர்களுள் எவரேனும் நான்கு முகவர்களைக் குறிப்பிட்டு, அம்முகவர்களின் சிறப்பான தொழிற்பாட்டினையும் விபரிக்குக. (4புள்ளிகள்)

v) அ) சிறப்புச் சந்தைகள் நுகர்வோர் இடையே பிரசித்தமாகக் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்க.
ஆ) வாடிக்கையாளர் ஒருவருக்கு இலத்திரனியல் வர்த்தகத்தினால் கிடைக்கும் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

பகுதி - II

(5) i) (அ) "முகாமைத்துவம்" என்பதால் கருதப்படுவது யாது?

(ஆ) முகாமைத்துவ செயன்முறையை வரைபடமொன்றின் மூலம் காட்டுக. (4புள்ளிகள்)

ii) (அ) சகல மட்ட முகாமையாளர்களிற்கும் சம அளவில் தேவைப்படும் திறன் எது? காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) தீர்மானம் எடுப்பது தொடர்பான செயலொழுங்கின் படிமுறைகளை எழுதுக. (4புள்ளிகள்)

iii) (அ) "திட்டங்கள் சில சமயங்களில் தோல்வியடைகின்றன" உதாரணங்கள் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக.

(ஆ) நெறிப்படுத்தல் செயல் முறையிலுள்ள கருமமொன்றாகிய ஊக்குவித்தல் மூலம் முகாமைத்துவத்துக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை? (4புள்ளிகள்)

iv) (அ) செயற்பாட்டு இட அமைவுத் திட்டமிடல் மூலம் கிடைக்கக்கூடிய நான்கு அனுகூலங்களை விபரிக்குக.

(ஆ) உற்பத்தியாளரொருவர் தனது உற்பத்தியைத் தொகுதி (Batch) முறையிலிருந்து பாய்ச்சல் (Flow) முறைக்கு மாற்ற விரும்புகிறார். இம்மாற்றத்தின் மூலம் அவர் பெற்றுக்கொள்ளக் கூடிய நான்கு நன்மைகளை எழுதுக. (4புள்ளிகள்)

v) வளங்களைப் பயன்படுத்தி உயர்தரத்துடனான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் செயற்பாட்டு முகாமையின் அடிப்படைக் கருமமாகும்.

(அ) உற்பத்திக் கட்டுப்பாட்டுக் கருமங்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.

(ஆ) வணிகமொன்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வெற்றியில் தரக்கட்டுப்பாடு தாக்கம் செலுத்தும் நான்கு விதங்களை விபரிக்குக. (4புள்ளிகள்)

(20புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

(6) i) (அ) நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதி கூலங்கயைும் எழுதுக.

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப்பொருளுக்கான விலைகளை நிர்ணயித்தல் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் நான்கு குறிக்கோள்களை குறிப்பிடுக. (4புள்ளிகள்)

ii) உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை போட்டியாளர்களுடைய உற்பத்திப் பொருட்களில் இருந்து நுகர்வோர் வேறுபடுத்தி இனங்காண்பதற்காக சின்னங்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

(அ) சிறந்த சின்னமொன்றினால் வெளிப்படுத்தப்பட வேண்டிய இரண்டு முக்கிய குணவியல்புகளை விபரிக்குக.

(அ) சின்னங்களை இடுவதனால் நுகர்வோருக்கு கிடைக்கத்தக்க நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

iii) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(அ) விற்பனை மேம்படுத்தல் (Sales Promotion) தனிப்பட்ட விற்பனை (Personal Selling)

(ஆ) சந்தைத் துண்டமாக்கல் (Market Segmentation) இலக்குச் சந்தை (Targt Market)(4புள்ளிகள்)

iv) (அ) வணிகமொன்று நிதிமூல மொன்றைத் தெரிவு செய்கையில் கருத்திற்கொள்ள வேண்டிய நான்கு காரணிகளை எழுதுக.

(ஆ) காசு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களை விளக்குக. (4புள்ளிகள்)

v) வணிக நடவடிக்கைகளில் அரச துறையினரின் பங்களிப்பிற்குச் சார்பாகவும், எதிராகவும் வாதங்களை முன்வைக்கமுடியும். இதில் உங்களுக்கு விரும்பிய விதத்தில் (எதிராக அல்லது சார்பாக) உங்களது வாதங்களை முன்வைக்குக. (4புள்ளிகள்)

(20புள்ளிகள்)

(7) i) (அ) வணிக மொன்றின் நிதித்தேவைப்பாட்டின் இருவகைகளையும் குறிப்பிட்டு விபரிக்குக.

(ஆ) முதலீட்டாளர் ஒருவர் பங்குச்சந்தையில் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் அடைந்து கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

ii) (அ) "ஒதுக்கங்கலை மூலதனமாக்கல்", "உரிமை வழங்கல்" என்றால் என்ன என்பதனை விபரிக்குக.

(ஆ) ஒரு நாட்டின் பங்குச்சந்தையின் முக்கியத்துவம் தொடர்பில் நீர் வலியுறுத்திக்கூறக்கூடிய நான்கு காரணிகளை எழுதுக. (4புள்ளிகள்)

iii) (அ) தகுதி காண் காலத்தினுள் ஊழியரொருவரின் நிறைவேற்றம் திருப்திகரமாக இல்லாத பொழுது பொழுது தொழில் வழங்குநர் அவருக்கு எதிராக எடுக்கக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் கூறுக.

(ஆ) ஊழியர்களுக்கு பயிற்சியும் அபிவிருத்தியும் அளித்தலுக்காக பயன்படுத்தும் முறைகளைப் பெயரிடுக. (4புள்ளிகள்)

iv) (அ) மனித வளத்தைத் திட்டமிடுவதனால் நிறுவனம் ஒன்றுக்குக் கிடைக்கக்கூடிய நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

(ஆ) ஒரு நிறுவனம் தனது வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆளணியினரை உள்ளேயிருந்து ஆட்சேர்ப்புச் செய்யத்தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் தனித்தனியாக ஆராய்க. (4புள்ளிகள்)

v) குறித்த ஒரு பதவிக்கு மிகப்பொருத்தமான நபரை தெரி செய்ய வேண்டியது முக்கியமாகும். அத்தகைய தெரிவு செய்தல் முறைகள் நான்கை சுருக்கமாக விபரிக்குக. (4புள்ளிகள்)

(20புள்ளிகள்)

(8) i) (அ) தகவல் முறைமைகள் நான்கு மட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன அந்நான்கு மட்டங்களும் எவை?

(ஆ) பயன்பாட்டினடிப்படையில் தகவல் முறைமையின் வகைகள் நான்கு தருக. (4புள்ளிகள்)

ii) தகவல்களை வகைப்படுத்தக்கூடிய நியதிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக. (4புள்ளிகள்)

iii) (அ) முகாமைத்துவ செயற்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமையினை வகைப்படுத்தி அவற்றின் உபமுறைகள் இரண்டு வீதமும் குறிப்பிடுக.

(ஆ) "உள்ளூர் பரப்புவலையமைப்பு" (LAN) "பெரும் பரப்பு வலையமைப்பு" (WAN) ஆகியவற்றை விபரிக்குக. (4புள்ளிகள்)

iv) (அ) வணிகத்திட்ட மொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பகுதிகள் யாவை?

(ஆ) வணிகமொன்றின் மனிதவளத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு விடயங்களைப் பெயரிடுக. (4புள்ளிகள்)

v) (அ) வணிகத் திட்டம் தயாரிக்கப்படுவதன் சந்தர்ப்பங்களுக்கான நான்கு உதாரணங்கள் தருக.

ஆ) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாடுகளுக்கான நிதித்தேவைப்பாடு தொடர்பில் நான்கு பிரதான கிரய உருப்படிகளைக் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

(20புள்ளிகள்)